# வாழ்வின் கருப்பொருள்

இந்த வருட ஆரம்பத்திலிருந்து, தேவ ஊழியக்காரனாகிய பவுல், பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தை மையமாக வைத்து, கருப்பொருளை தியானித்து வருகின்றோம். கடந்து சில நாட்களாக, பிலிப்பியர் 3ம் அதிகாரத்தின் கடைசி இரண்டு வசனங்களை மையமாக வைத்து தியானித்து வருகின்றோம். அந்த வசனங்களின் கருப்பொருள்தான் நம்முடைய வாழ்வின் இலக்கு! அதவாது, நம்முடைய குடியிருப்பு பரலோக்தில் இருக்கின்றது. நம் பாட்டிற்கு அங்கே செல்ல முடியாது, எனவே, அங்கு நம்மை கூட்டி செல்லும்படியாக, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். வாழ்வின் கருப்பொருளை குறித்து அதிகமாக பேசினால், இது அதே பிரசங்கம், கீறல் விழுந்து இசைத்தட்டானது, கீறல் விழுந்த இடத்தை கடந்து செல்லாமல், அந்த இடத்திலே தரித்திருந்து, அந்த இடத்திலுள்ள பாடலின் ஒருவரியையே திரும்ப திரும்ப இசைப்பது போல இருக்கின்றது. ஒவ்வொரு கிழமையும்பழைய கதைதான், செத்த பாம்பை அடிக்கின்றவர்கள் போல பேசுகின்றார்கள் என்று விசுவாச மார்க்கத்தார் சொல்வதை கேட்டிருப்பீர்கள். ஒரு மாணவன், பாடசாலைக்கு சென்று, அநேக வருடங்களாக கல்வி கற்று, இறுதிப் பரீட்சையில்சித்தியடையாமல்போனால் அத்தனை வருடங்களாக அவன்பட்ட பிரயாசத்தின் பலன் என்ன? செழிப்பாக, வளர்ந்து, அழகாக காட்சியளிக்கும் திராட்சை செடியிலே கனிகள் இல்லாதிருந்தால், அந்த திராட்சைசெடியின் செழிப்பிலும்,அழகிலும்பலன் என்ன? தேவன் என்னை ஆசீர்பதித்திருக்கின்றார் என்று ஐசுவரியத்தோடு வாழ்ந்து, குடும்ப வாழ்வு கெட்டுப்போனால் அதனால் இலாபம் என்ன? அதுபோலவே, பல நன்மையான செயற்பாடுகளை செய்து, தானதர்மங்களை நடப்பித்து, அநேக நாடுகளுக்கு கடந்து சென்று சுவிசேஷம் அறிவித்து, அநேகரை சபைக்கு அழைத்து வந்தும், கனியற்ற வாழ்க்கை வாழ்ந்தால் அதனால் பலன் என்ன? இறுதி நாளிலே, நல்ல கனி கொடாத மரங்கள் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். அதுபோ வே, ஒரு விசுவாசியானவன், வாழ்நாள் முழுவதும் பிரயாசப்பட்டும், நிரந்தர குடியிருருப்பாகிய பரலோகத்தை அடையாமல் போனால், அதனால் அவனுக்கு பலன் என்ன? எனவே, நம்முடைய குடியிருப்பை குறித்து திரும்ப திரும்ப ஞாபகப்படுத்தி, அதை நோக்கியே முன்னேறுங்கள்.

**மாற்கு 8:36**

மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?

**ஜெபம்**: பரலோக தேவனே, கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொண்டு, உமக்கு பிரியமானது இன்னதென்று நான் சோதித்தறிய ஞானமுள்ள இருயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்

**மத்தேயு 7:14**

**ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.**

உலகத்தின் போக்கு மாறிக் கொண்டு போகின்றது. காலத்திற்கு காலம் புதிய யுகங்கள் உண்டாகின்றது. நவீன தொழிலநுட்ப முன்னேற்றங்களைக் குறித்து மனிதகுலமானது பெருமைபாராட்டிக் கொள்கின்றது. வாழ்கை முறைமையும், மனிதர்களுடைய நடை உடை பாவனைகளும் மாறிக் கொண்டே போகின்றது. பாடசாலைக்கு செல்லும் மாணவர்களின் கல்வி முறைமைகயும் பாடத்திட்டங்களும் யுகத்திற்கு யுகம் மாற்றமடைகின்றது. பாடசாலைகளிலே சட்ட திட்டங்களும், ஒழுங்கு முறைகளும் மாற்றியமைக்கப்படுகின்றது. மனிதர்களுடைய வாழ்க்கைக்கேற்ப தேவனாகிய கர்த்தருடைய பரிசுத்தத்தை மாற்றிவிட கூடுமோ? இல்லை. ஆனால், கள்ளப் போதகர்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறும் மனிதர்கள், பரிசுத்த வேதாகமத்திற்கு புதிய விளங்கங்களை கூறி, தேவனாகிய கர்த்தருடைய பரிசுத்தத்தை தங்கள் வாழ்க்கை முறைக்கு ஏற்றபடி மாற்றிவிட பிரயாசப்படுகின்றார்கள். இதைக் குறித்து, தேவனுடைய ஊழியக்காரனாகிய பேதுரு கூறும் போது, "கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள் அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள் அவர்கள்நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும். பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்ளுவார்கள் பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது." என்று கூறியிருக்கின்றார். பிரியமானவர்களே, தேவனாகிய கர்த்தர், இருக்கின்றவராய் இருக்கின்றவர். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். எனவே உலகபோக்கை பின்பற்றாமல், சத்திய வார்த்தையிலே நிலைத்திருங்கள். நவீன போதனைகளை குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். மேலானவைகளை நாடித் தேடுங்கள். இந்தப் பூமிக்குரியவைகள் அநித்தியமானவைகள். கேட்டுக்கு செல்லம் விசாலமாக தோன்றும், இலகுவான வாசல் வழியாக நுழையாமல், இடுக்கமான வாசல் வழியலே உட்பிரவேசியுங்கள்.

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை வேறு பிரித்த தேவனே, அந்த மகிமையான அழைப்பின் மேன்மையை உணர்ந்து, உம்முடைய சத்திய வழியிலே நடக்க எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பெரிதான அழைப்பு

**எபேசியர் 4:1**

**நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து,**

ஒரு பிள்ளையானவன், விபரமறியும் காலத்திற்கு முன்னே, அவனைப் பார்த்த முதியவரொருவர் அவனுடைய போக்குகள் சரியானதல்ல. சில காரியங்கள் இப்பொழுதே மாற்றப்பட வேண்டும் என்று அவனுடைய பெற்றோருக்கு அறிவுரரை கூறினார். அது அவனுடைய சின்ன வயதல்லவோ? அவன் செய்வது பாதகமற்ற அற்பமான காரியங்கள் அல்லவோ? உண்மை! ஆனால், பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் என்று நீதிமொழிகளின் புத்தகத்திலே வாசிக்கின்றோம். உன்னதமான அழைப்பை பெற்ற தேவ பிள்ளைகளே, அவருடைய அழைப்பை குறித்து, அசதியாய் இருந்து விடாதிருங்கள். சின்னக் காரியத்தானே என்று, சாட்டுப் போக்குகளை விதைக்காதிருங்கள். அவை காலப்போலக்கிலே பெரிய விருட்சமாக மாறிவிடும். ஒரு சமயம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து முன்னுரிமைப்படி அழைப்பை பெற்றவர்களைக் குறித்து கூறும் போது: ஒரு மனுஷன் பெரியவிருந்தை ஆயத்தம்பண்ணி, அநேகரை அழைப்பித்தான். விருந்து வேளையில் தன் ஊழியக்காரனை நோக்கி: நீ அழைக்கப்பட்டவர்களிடத்தில் போய், எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது வாருங்கள், என்று சொல்லென்று அவனை அனுப்பினான். அவர்களெல்லாரும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள். ஒருவன்: ஒரு வயலைக் கொண்டேன், நான் அகத்தியமாய்ப்போய், அதைப் பார்க்கவேண்டும், என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: ஐந்தேர்மாடு கொண்டேன், அதைச் சோதித்துப்பார்க்கப் போகிறேன், என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: பெண்ணை விவாகம்பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது என்றான். அந்த ஊழியக்காரன் வந்து, இவைகளைத் தன் எஜமானுக்கு அறிவித்தான் அப்பொழுது வீட்டெஜமான் கோபமடைந்து, தன் ஊழியக்காரனை நோக்கி: நீ பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய்ப் போய், ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே கூட்டிக்கொண்டுவா என்றான். பெருவழிகளிலும் வேலிகளருகிலும் இருந்தவர்கள் விருந்தை ருசிபார்த்தார்கள். அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லை என்றார். எனவே, சாட்டுபோக்குகள் சொல்வதை விட்டுவிட்டு, தேவனுடைய அழைப்பின் மேன்மையை உணர்ந்து அதற்கு பாத்திரராக நடந்து கொள்ளுங்கள்.

**ஜெபம்**: பரலோக மேன்மைக்கென என்னை அழைத்த தேவனே, நித்திய பரம தேசத்திற்கென நான் பெற்ற அழைப்பைக் குறித்து அசதியாக இருக்காமல், உணர்வுள்ள இருயதத்தோடு நான் வாழும்படிக்கு என்னை நடத்திச்செல்வீராக.இரட்சகர் இயேசுகிறிஸ்துவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ‘இரட்சிப்பு’

இந்தப் பூமியிலே வாழும் மனிதர்கள், நித்திய வாழ்வு தரும் இரட்சிப்பின் செய்தியை அசட்டை செய்து, மேலானவைகளைத் தேடாமல் பூமிக்குரியவைகளை நாடுகின்றார்கள். இன்னும் சிலர், இரட்சிப்பின் செய்தியை அறிவிப்பர்களை துன்புறுத்துகின்றார்கள். ஆனால் இன்னும் சிலரோ, உன்னதமான அழைப்பை ஏற்று, இரட்சிப்பின் வஸ்திரத்தை பெற்ற பின்னும், விலைமதிக்க முடியாத அந்த இரட்சிப்பை குறித்து கவனமற்றவர்களாக வாழ்ந்து விடுகின்றார்கள். இதைக் குறித்து ஆண்டவராகிய இயேசு ஒரு உவமையைக் கூறினார். பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான் அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள். ராஜாவின் ஆயத்தம் பண்ணின விருந்தை அசட்டை பண்ணி, தங்கள் நாளாந்த அலுவல்களை செய்வதற்கு போய் விட்டார்கள். வேறுசிலரோ: ராஜாவின்ஊழியக்காரரை அற்பமாக எண்ணி, அவர்களை பிடித்து, அவமானப்படுத்தி, கொலைசெய்தார்கள். ராஜா அதைக் கேள்விப்பட்டு, கோபமடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான். அப்பொழுது, அவன் தன் ஊழியக்காரரை நோக்கி: கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள். ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள் என்றான். அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக் கொண்டு வந்தார்கள் கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது. விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு: சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டார் அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான். அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார். நீங்களோ பெற்ற இரட்சிப்புக்கு பாத்திரராக நடந்து கொள்ளுங்கள்.

**எபிரெயர் 2:4**

**இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்.**

**ஜெபம்:** அநாதி தீர்மானத்தின்படி என்னை அழைத்த தேவனே, நீர் தாமே சாட்சிகொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பை குறித்து நான் கவனமற்று போகாதாபடிக்கு, உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# முடிவு பரியந்தம் நிலைநிற்பவர்கள்

பரலோகத்திலிருந்து நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து வெளிப்பட காத்திருக்கும் அருமையான விசுவாசிகளே, வெளிப்பட இருக்கும் இரட்சகர், ஒரு சமயம் தம்முடைய சீஷரை நோக்கி: "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில்சேர்த்துக்கொள்ளுவேன்." என்று வாக்குரைத்திருக்கின்றார். இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? அவருடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? என்று அவருடைய சீஷர்கள் அவரிடம் கேட்டிருந்தார்கள். அதற்கு அவர் மறுமொழியாக முதலாவது கூறியதாவது: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள் கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள் இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே. ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும் பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம். அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள் என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள். அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் என்றார். எனவே, உங்கள் வாழ்க்கை நீங்கள் எதிர்நோக்கும் சம்பவங்களையும், உலகத்திலே நடக்கும் மேற்கூறிய சம்பவங்களைக் குறித்து, ஆச்சரியப்பட்டு, சோர்ந்து போய், பின்வாங்கிப் போகாமலும் இருக்கும்படிக்கு பரிசுத்த வேதாகமத்தை வாசியுங்கள், தியானியுங்கள், அனுதினமும் ஊக்கத்தோடே ஜெபியுங்கள், சத்திய ஆவியானவர்தாமே சத்திய வார்த்தையிலே உங்களை வழிடத்த இடங் கொடுங்கள்.

**மத்தேயு 24:13**

முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

**ஜெபம்:** அன்பின் தேவனே, அக்கிரமம் மிகுதியாவதினால் என்னுடைய அன்பு தணிந்துபோகாமல், என் ஆயுள்நாட்கள் முடியும்வரை உம்முடைய வார்த்தையிலே நான் நிலைநிற்கும்படிக்கு என்னை பெலப்படுத்தி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனால் கூடாதது ஒன்றுமில்லை

தேவ ராஜ்யத்தினுடைய இரட்சிப்பின் நற்செய்தியானது பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும் என்று நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார். அது எப்படியாகும், காடுகளிலேயும், நாடுகளிலே இருக்கின்றவர்கள் அதை எப்படி அறிவார்கள் என்று சிலர் தங்களை மனதிலே குழப்பம் அடைகின்றார்கள். அருமையானவிசுவாசிகளே, தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. எனவே, இரட்சிப்பின் நற்செய்தியை ஏற்றுக் கொண்டிருக்கும் நீங்கள், ஜாக்கிரதையுள்ளவர்களாக விழித்திருங்கள். உங்களிடம் ஒப்புக் கொடுத்தவைகளை தேவ சித்தத்தின்படி நீங்கள் நிறைவேற்றி முடிக்கும்படி உங்கள் இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ளுங்கள். கடைசி நாட்களுக்குரிய தீர்க்கதரிசனங்கள் முன்னுரைக்கப்பட்டிருக்கின்றது. அதைக் குறித்து நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் கூறியிருப்பதை மத்தேயு 24ம் அதிகாரத்திலே வாசிக்கலாம். நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களையும், இனி நடக்க இருக்கும் கொடிதான அக்கிரமங்களையும் குறித்து நொந்து கொள்ளாமல், அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதி செய்தவர்களாக, தேவ வார்த்தையிலே நீங்கள் நிலைத்திருங்கள். "அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும். அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ அங்கே இருக்கின்றார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன். ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதி ருங்கள் இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்க ளானால் நம்பாதிருங்கள். மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவ ரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்திலே தோன்றும். தம்முடையவர்களை கூட்டிச் சேர்க்க வலுவாய் தொனிக்கும் எக்காளத்தோடே அவர் தம்முடைய தூதர்களை அனுப்புவார்.

**மத்தேயு 24:33**

**அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகின்ற நாளை நோக்கி நான் வஞ்சையுள்ளவனாக காணப்பட உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# 'ஆயத்தமாயிருங்கள்'

பரலோகத்திலிருக்கிற நம்முடைய குடியிருப்பிலிருந்து, கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கி அருமையான விசுவாசிகளே, கிருபையின் நாட்களிலே வசித்து வரும் நாம், இந்த நாட்களை, சாட்டுப்போக்கின் நாட்களாகவும், பிள்ளைகள் பெற்றோரின் வழிகளையும், பெற்றோர் பிள்ளைகளின் வழிகளையும் நியாயப்படுத்தும் நாட்களாகவும் விரயம் செய்யாமல், அவருடைய நாளுக்கென ஆயத்தப்படுவதற்கென பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆதயத்தமற்றவர்களாக இருப்பவர்களுக்கு உரைக்கப்பட்டிருக்கும் சத்திய வார்த்தை நிறைவேறும். ஏனெனில், "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான் பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண் கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள் அப்படியே மனுஷகுமாரன் வருங் காலத்திலும் நடக்கும்.அப்பொழுது, இரண்டுபேர் வயலில் இருப்பார்கள் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான். இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக்கொண்டிருப்பார்கள் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள். உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார் ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்." என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார். மற்றவர்களை குறித்த கரிசணை அவசியமானது. ஆனால், விசுவாசிகளாயிருக்கின்ற பெற்றோர், பிள்ளைகள், நண்பர்கள், உறவினர்கள், தங்கள் தங்கள் வழிகயை ஆராய்ந்தறிந்து, கர்த்தருடைய நாளுக்கென்று ஆயத்தமுள்ளவர்களாக காணப்பட வேண்டும். வானமும் பூமியும் ஒழிந்துபோம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. எனவே விழிப்புள்ளவர்களாக காணப்படுவோமாக.

**மத்தேயு 24:44**

**நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.**

**ஜெபம்**: வார்த்தையில் உண்மையுள்ள தேவனே, நீர் தந்திருக்கும் கிருபையின் நாட்களை நான் விருதாவாய் எண்ணாதபடிக்கு, உணர்வுள்ள ஜீவியம் ஜீவிக்க மனக்கண்களை பிரகாசிக்கும்படி வேண்டிக் கொள்கின்றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விவேகமுள்ள ஊழியக்காரன்

நீங்கள் கிறிஸ்துவிலிருந்த சிந்தையைத் தரித்து, ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக என்பதைக் குறித்த கடந்த மாதங்களிலே பிலிப்பியர் 2ம் அதிகாரத்திலே தியானித்து வந்தோம். தேவனுக்கு ஊழியம் செய்கின்றவன், தன்னுடைய பொறுப்புக்களைநிறைவேற்றி, எஜமானன் இல்லாத நேரத்திலும், தன் எஜமானனுக்கு பயபக்தியுள்ளவனாக இருந்து, தன் பண்ணையிலே வேலை செய்யும் ஊழியர்களை விசாரிக்க வேண்டும். அதாவது, அவர்கள் செய்யும் அநியாயத்தை நியாயம் என்று கூற வேண்டும் அல்லது அநீதிகளைபராமுகமாக விட்டுவிட வேண்டும் என்பது பொருள் அல்ல. மாறாக, உண்மையுள்ள இருதயத்தோடு, அவர்களை நல்வழியிலே நடத்தி, அவர்கள்மேல் கரிசணையுள்ளவர்களாக காணப்படவேண்டும். இதைக் குறித்து கர்த்தராகிய இயேசு கூறும் போது: “ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங் கொடுத்து அவர்களை விசாரிக் கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்? எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான். தன் ஆஸ்திகள் எல்லாவற்றின் மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அந்த ஊழியக்காரனோ பொல்லாதவனாயிருந்து: என் ஆண்டவன் வர நாள் செல்லும் என்று தன் உள்ளத்திலே சொல்லிக்கொண்டு, தன் உடன்வேலைக்காரரை அடிக்கத் தொடங்கி, வெறியரோடே புசிக்கவும் குடிக்கவும் தலைப்பட்டால், அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும், அறியாத நாழிகையிலும், அவனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய்த் தண்டித்து, மாயக்காரரோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான் அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.” எனவே கர்த்தர் வெளிப்படும் நாளிலே, நாம் பாக்கியம் பெற்றவர்களாக காணப்படும்படிக்கு, இந்நாட்களிலே நாம் அவர் வருகையின் நாளுக்கென்று எப்போதும் ஆயத்தப்படுகின்றவர்களாகவும், உள்ளத்திலே உண்மையும் உத்தமமுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும்.

**மத்தேயு 24:44**

**ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங் கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்?**

**ஜெபம்**: அநாதி தீர்மானித்தின்படி என்னை அழைத்த தேவனே, உம்மிடம் பெற்றுக் கொண்ட பொறுப்புக்களை நல்மனதோடு நிறைவேற்றி முடிக்க, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்து வாழ்ந்து கொண்டிருக்கும் அவருடைய பக்தர்களுக்கு, அவருடைய வருகை மிகப் பெரும் மகிழ்ச்சி, ஆனால் அவர் வருகையை எதிர்பாராத மாந்த ர்க்கு அந்த நாள் கெடித்தும் பயங்கரமுமான நாளுமாயிருக்கும் என்று பொருட்படும்படி ஒரு பாடலின் வரிகள் அமைக்கப்பட்டிருக்கின்றது. மேற்குறிப்பிட்ட வரிகளை மறும்படியும் வாசித்து, சற்று தரித்திருந்து தியானியுங்கள். கடந்த இரண்டு கிழமைகளாக, நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கின்றது என்பதைக் குறித்து தியானித்து வந்தோம். அதை வாய்ப்பேச்சுடன் நிறுத்திவிடாமல், அதன்படிக்கு நம்முடைய வாழ்க்கையானது அந்தப் பேச்சுக்கு ஒத்திருக்க வேண்டும். ஆயத்தமற்றவர்கள் கைவிடப்படுவதைக் குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதாமே, தெளிவாக உரைத்திருப்பதை நாம் மத்தேயு எழுதின சுவிசேஷத்திலிருந்து பார்த்தோம். எனவே, உங்களுடைய இருதயம் உணர்வற்றுப் போகாதபடிக்கு எல்லாக் காவலோடும் அதைக் காத்துக் கொள்ளுங்கள். “ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்.” என்று யூதா எழுதின நிரூபத்திலே வாசிக்கின்றோம். நித்திய கன மகிமைக்கென்று அழைக்கப்பட்ட அருமையான விசுவாசிகளே, சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள் நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே. ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்க ளாயிருக்கக்கடவோம். தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள் வெறிகொள்ளுகிறவர்கள் இராத்திரியிலே வெறிகொள்ளுவார்கள். பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்.

**1 தெச 5:6**

ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்.

**ஜெபம்:** நித்திய குடியிருப்புக்கு என்னை அழைத்த தேவனே, கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமுள்ளவர்களாக காணப்படும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை உம்முடைய வார்த்தையின் வழியிலே வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்

தேவனுடைய ஊழியக்கரனாகிய பவுல், பிலிப்பியருக்கு எழுதின நிரூபத்தின் 3ம் அதிகாரத்தில், கடைசி இரண்டு வசனங்களையும் தியானித்து வந்தோம். குறிப்பாக நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கின்றது. அங்கிருந்து நம்முடைய இரட்சகராயிருக்கின்ற இயேசு கிறிஸ்து வெளிப்படும்படி எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இதுவே இந்த பூமியிலே ஒரு விசுவாசியின் வாழ்க்கையின் நோக்கத்தின் சாரம்சம். இதுவே இலக்கு. இதை மையமாக வைத்தே மிகுதியான காரியங்கள் யாவும் செயற்படுத்தப்பட வேண்டும். தனிப்பட்ட வாழ்விலே, குடும்பத்திலே, உறவினர் நண்பர்கள் மத்தியிலே, பாடசாலைகளிலே, வேலை செய்யும் இடங்களிலே, ஆளுகை செய்யும் அதிகாரங்களிடமிருந்தும், வெளியிடங்களிலே, அயலவர்கள் மத்தியிலே, அந்நியர்களிடமிருந்தும், எதிரிகளிடமிருந்தும் சவால்களும், நெருக்கங்களும், துன்பங்களும், நம்பிக்கை துரோகங்களும் உண்டாகலாம். அதுமட்டுமல்ல, சபையிலே, ஊழியங்களிலே, விசுவாசிகள் மத்தியிலே கருத்து முரண்பாடுகளும் நம்பிக்கைத் துரோகங்களும் உண்டாகலாம். ஒருவேளை நன்மை செய்து பாடநுபவிக்க நேரிடலாம். நஷ்டங்கள் உண்டாகலாம். இவை எல்லாவற்றின் மத்தியிலும், விசுவாசிகள் தங்கள் நோக்கத்தை மறந்து போய்விடக்கூடாது. அதவாது, நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கின்றது. அங்கிருந்து நம்முடைய இரட்சகராயிருக்கின்ற இயேசுகிறிஸ்து வெளிப்படும்படி எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இக்காலத்து பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவே. நாம் வாஞ்சிப்பது நாம் நம் கண்களால் காணும் உலகமல்ல. நாம் காணாத பரலோகத்தை வாஞ்சிக்கின்றோம். "நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்." ஏன்று பரிசுத்த வேதாகமத்திலே ரோமருக்கு எழுதின நிரூபத்திலே தேவ ஊழியராகிய பவுல் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். பிலிப்பியர் 4ம் அதிகாரத்தின் ஆரம்பத்திலே, ஆதலால், எனக்குப் பிரியமும் வஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள் என்று கூறியிருக்கின்றார். ஆம் அருமையான விசுவாசிகளே, எல்லா சூழ்நிலைகளின் மத்தியிலும், உயர்விலும், தாழ்விலும், மேன்மையான இலக்கை மனகண்முன் வைத்துக் கொண்டு, கர்த்தருக்குள் நிலைத்திருங்கள். அழைத்தவர் உண்மையுள்ளவர்!

**பிலிப்பியர் 4:1**

பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்.

**ஜெபம்:** பரலோக தேவனே, இவ்வுலக பாடுகளினாலும், சுகபோகங்களினாலும், நான் என்னுடைய மேலான நோக்கத்தை மறந்து போய்விடாமல், உம்முடைய வார்த்தையிலே நிலைத்திருந்து கனி கொடுக்க பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருங்கள்

அக்காலத்திலே, பிலிப்பி சபை விசுவாசிகள் மத்தியிலே கருத்து வேற்றுமைகளும், பிரிவினைகளும் உண்டாயிருந்தது. இதைக் குறித்து பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் 2ம் அதிகாரத்தின் ஆரம்பத்திலே தேவ ஊழியக்காரனாகிய பவுல் குறிப்பிடும் போது: ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அப்புள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் என்று கூறியிருக்கின்றார். சபையிலே நடக்கும் குழப்பங்களை குறித்து நிரூபங்களிலே எழுதும் போது, அவற்றை குறிப்பிட்ட நபர்களுக்கு கூறாமல், பொதுவாக எழுதியிருப்பதைக் காணலாம். ஆனால் பிலிப்பி சபையிலே இருந்த இரண்டு விசுவாசிகளுக்கு, அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டு, கர்த்தருக்குள் ஒரே சிந்தையாக இருக்கும்படி புத்தி சொல்லியிருக்கின்றார். கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்திசொல்கிறேன் என்று 4ம் அதிகாரம் 2ம் வசனத்திலே வாசிக்கலாம். இவர்கள் அந்த சபையோர் மத்தியிலே நன்கு அறிமுகமானவர்களாக இருந்திருக்க வேண்டும். இவர்கள் இருவரும் கிறிஸ்துவின் நற்செய்திக்காக பிரயாசப்பட்டவர்கள். அவர்கள் நாமங்கள் ஜீவ புத்தகத்திலே எழுதியிருக்கின்றது என்பதையும் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், பிற்பாடு அவர்களுக்குள் கருத்து முரண்பாடுகள் உண்டாயிருந்து. அதனால், அவர்கள் மத்தியிலே உண்டாயிருக்கும் வேற்றுமைகளை விட்டுவிட்டு, கிறிஸ்துவின் அழைப்பின் நோக்கத்தை குறித்த ஒரே சிந்தையை தரித்திருக்கும்படி அறிவுரை கூறியிருக்கின்றார். அவர்களுக்குள் உண்டான கருத்து முரண்பாட்டினால், அவர்களை தள்ளிவிடாமல், அவர்கள் மறுபடியும் நல்லிணகத்திற்குள் வரும்படி அவர்களுக்கு உதவிபுரியும்படி அங்கிருந்த ஊழியர்களை வேண்டிக் கொண் டார். எங்கள் மத்தியிலும் இத்தகைய நிலைமைகள் உண்டாகலாம். அப்படியான சூழ்நிலைகள் வந்து எங்கள் நோக்கத்தையும் பிரயாசத்தையும் திசைதிருப்பாதபடி, நாங்கள் எப்போதும் கிறிஸ்துவுக்குள் ஒரே சிந்தையாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

**பிலிப்பியர் 4:2**

**கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, ஆண்டுகள் கடந்து சென்றாலும், நான் கர்த்தருக்குள் ஒரே சிந்தையாக இருக்கும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எதைக்குறித்த சிந்தை?

கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருங்கள் என்பதைக் குறித்து கடந்த நாளிலே தியானம் செய்தோம். எடுத்துக்காட்டாக, என்னுடைய எண்ண மும் நோக்கமும் கிறிஸ்துவிலே நிலைத்திருப்பதாக இருக்க வேண்டும். அதே போல உங்களுடைய எண்ணமும் நோக்கமும் கிறிஸ்துவிலே நிலைத்திருப்பதாக இருக்க வேண்டும். அப்பொழுது அங்கே ஒரு மனமும் ஐக்கியமும் உண்டாயிருக் கும். சிறு பிள்ளைகள் அறியாத வய திலே தவறும் போது, அவனுக்கு அறிவு வரும் நாள்வரைக்கும் சிலர் அவன்மேல் பொறுமையாக இருக்கி ன்றார்கள். ஆனால், அவன் பூரண அறிவை அடைந்த பின்னும், அநியா யக்காரனாக இருந்து, அவன் கிறி ஸ்துவிலே நிலைத்திருக்க மனதில் லாதவனாக இருந்தால், ஒரு விசு வாசி எப்படி அவனோடு ஒரே சிந்தையாக இருக்க முடியும்? உங்கள் சொந்த குடும்பத்தினரோ அல்லது நீங்கள் நேசிக்கும் நண்பர்கள் உறவி னர்களோ, கிறிஸ்துவோடு ஐக்கியமாக இருக்க மனதில்லாதிரு ந்தால், நீங்கள் அவர்களுக்காக தேவ இரக்கத்திற்காக வேண்டுதல் செய்ய முடியும். ஆனால், அநியாயத்தை நியாயம் என்றும், அநீதியை நீதியும் என்றும் கூற முடியாது. அருமையான இரட்சிப்பை பெற்ற பின்னரும், சிலர் உலகத்தின் சுகபோகங்களின்மேல் ஆசை வைத்து பின்வாங்கிப் போகின்றார்கள். சபை ஆராதனைகளில் அவ்வப்போது காணப்பட் டாலும், கிறிஸ்துவின் சிந்தையைக் குறித்த எண்ணம் அவர்களிடத்தில் இல்லை. இவர்களில் சிலர் வேதபுரட்டர்களாய் மாறி, மற்றவர்களையும் தங்கள் வழிகளிலே வஞ்சிக்க முயற்சி செய்வார்கள். இவைகளை குறி த்து 2 பேதுரு 2ம் அதிகாரத்தில், தேவ ஊழியக்காரனாகிய பேதுரு குறிப்பிட்டிருப்பதை வாசிக்கலாம். கருப்பொருளாவது, முதலாவது, நான் கர்த்தருக்குள் ஒரே சிந்தையாக இருக்க கற்றுக் கொள்ள வேண் டும்.என்னுடையசிந்தை கிறிஸ்துவின் சிந்தையிலிருந்து விலகிப் போகும் போது, உள்ளத்திலே கசப்புக்களும், பிரிவினைகளும், வாக்குவாதங் களும் உண்டாகும். ஒருவன் கிறிஸ்துவோடு இருக்க மனதில்லாதவனாக இரு ப்பானாகில், அவனோடு ஐக்கியமாக இருக்க முடியாது. ஆனால், அவனுக்கு ஆலோசனை கூறி, அவனுக்காக ஜெபிக்க முடியும். ஆனால், நான் கிறிஸ்துவிலே நிலைத்திருந்து கனி கொடுக்க வேண்டும். ஆதை ஒருபோதும் மறந்து போய்விடக்கூடாது.

**யோவான் 15:5**

**நானே திராட்சச்செடி, நீங் கள்கொடிகள். ஒருவன் என் னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடு ப்பான்**

**ஜெபம்:** முடிவில்லா வாழ்விற்கென்று என்னை அழைத்த தேவனே, நான் எப்போதும் உம்மிலும் உம்முடைய வார்த்தையிலும் நிலைத்திருக்கின்ற வனாக காணப்பட எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பொறுப்பும் மேலான இலக்கும்

கர்த்தருக்குள் ஒரே சிந்தையாக இருக்கும்படி புத்திமதி கூறியதைப் போலவே, நாமும் இக்காலத்திலே, வேறு சிந்தையாய் இருக்கும் ஒவ் வொரு விசுவாசிக்கும் கூற வேண்டும். உலக நீதி நியாங்களை பேசா மல், வீணான தர்க்கங்களை உண்டுபண்ணாமல், நாம் தேவ நீதியை யிலே நிலைத்திருக்க வேண்டும். மற்றவர்களை நியாந்தீர்க்கும் படிக்கு அல்ல, தேவ சித்தத்தை நம்மு டைய வாழ்விலே நிறைவேற்றி முடிக்கும்படியாக, கிறிஸ்துவின் சிந்தையை தரித்துக் கொள்ள வேண் டும். கிறிஸ்துவை அறிய முன்பு, நாம் உலக நீதி யையும், மனித நேயங்களையும் பேசின நாட்கள் இருந்தது. ஏனெனில், "முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்க ளும், வழித ப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களு க்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம்பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரை யொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவி யினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிரு பையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக, அவர் நமது இரட் சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்தஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார். இந்த வார்த்தை உண்மையுள்ளது. தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக் கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக்குறித்துத் திட்டமாய்ப் போதி க்கவேண்டுமென்று விரும்புகிறேன் இவைகளே நன்மையும் மனுஷ ருக்குப் பிரயோஜனமுமானவைகள். புத்தியீனமான தர்க்கங்களையும், வம்சவரலாறுகளையும், சண்டைகளையும், நியாயப்பிரமாணத்தைக்கு றித்து உண்டாகிற வாக்குவாதங்களையும் விட்டு விலகு் அவைகள் அப் பிரயோஜனமும் வீணுமாயிருக்கும். வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவ னுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனைவிட்டு விலகு" கிறிஸ்துவின் சிந்தையை தரித்தவர்களாக, உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பையும், மேலான இலக்கையும் நோக்கி முன்னேறுங்கள்.

**தீத்து 3:10**

**வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனை விட்டு விலகு.**

**ஜெபம்**: மேலான நோக்கத்திற்காக என்னை அழைத்த தேவனே, நீர் என க்கு தந்த மேன்மையான இலக்கை யாரும் பறித்துக் கொள்ள இடங் கொடுக்காமல் அன்போடு சத்தியத்தை கைகொண்டு நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | ஆடி 14

📖 மாலை வாசகம் – ஏசாயா 40:29

# வழியை காத்துக் கொள்ளுங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்த பெற்றோர் தங்கள் மகனானவனை கருத்தோடு தகுந்த முறையிலே வளரத்து வந்தார்கள். அந்த அயலிலே வாழ்ந்து வந்த மாணவனொருவன், அவர்களுடைய மகனாவனுக்கு, பல ஆண்டுகளாக உற்ற நண்பனாக இருந்து வந்தான். வாலிப பருவத்தை அடையும் நாட்களிலே, தங்கள் மனகனானவனின் உற்ற நண்பனின் வழிகள் தவறிப்போவதை பெற்றோரானவர்கள் கண்டு கொண்டார்கள். ஒருநாள் அவனை அழைத்து அவனோடு தயவாக பேசி, அவனை நல்வழிப்படுத்தும்படி நல் ஆலோசனைகளை வழங்கினார்கள். நாட்கள் கடந்து சென்ற பின்பும், அவர்களுடைய அயலிலே வாழ்ந்து வந்த அந்த மாணவனானவன், தன் வழியை சீர்படுத்தாமல், தகாத நட்புக்களை ஏற்படுத்திக் கொண்டான். பல தடவைகள் அவனை நல்வழிப்படுத்த எடுத்த முயற்சிகள் பலன ளிக்கவில்லை. எனவே, தங்கள் மகனானவனும் வழிதவறிப் போகாதபடிக்கு, சில நடவடிக்கைகளை எடுத்தார்கள். வழிதவறிப் போன மாணவனோடு சேர்வதை நிறுத்தினார்கள். அது அவர்களுக்கும், அவர்களுடைய மகனானவனுக்கும் இனிதான அனுபவமாக இருக்கவில்லை. அந்த மாணவனாவன், இவர்களுடைய மகனானவனுக்கு நன்மைகள் செய்திருந்தான். அந்த நன்றி உணர்வும், அவனைக் குறித்த கரிசணையும் இவர்களுக்கு இருந்தது. ஆனாலும், இவர்கள் தங்களுடையதை பாதுகாக்கும்படி தற்போது சில எல்லைகளை போட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள். நித்திய ஜீவனுக்கென்று அழைப்பை பெற்ற அருமையான விசுவாசிகளே, நாம் ஒரே சிந்தையாய் இருப்பதைக் குறித்து தியானித்து வருகின்றோம். அந்த ஒரே சிந்தையானது நம்முடைய பெரிதான அழைப்பைக் குறித்தது. அந்த அழைப்பின் வழி கிறிஸ்து. இந்த பாதையிலே நாம் நடந்து செல்லும் போது, சிலர் பெலவீனமடைந்து விழுந்து போகின்றார்கள். அதனால், அவர்களை நாம் தள்ளிவிடுவதில்லை. அவர்களை குறித்த கரிசணை மனதிலே இருக்க வேண்டும். அவர்களுக்கு முடிந்த அளவிற்கு உதவி செய்ய வேண்டும். அவர்களுக்கு ஆலோசனை கூற வேண்டும். அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். ஆனால், அவர்கள் விழுந்து கண்ணியிலே நாமும் விழாதபடிக்கு நம்முடைய எல்லைகளை ஸ்திரப்படுத்த வேண்டும். மாறுபாடுள்ளவனுடைய வழியிலே முள்ளுகளும் கண்ணிகளுமுண்டு. தன் ஆத்துமாவைக் காக்கிறவன் அவைகளுக்குத் தூரமாய் விலகிப்போவான்.

**நீதிமொழிகள் 22:5**

**மாறுபாடுள்ளவனுடைய வழியிலே முள்ளுகளும் கண்ணிகளுமுண்டு;**

**ஜெபம்**: அன்பின் பரலோக தேவனே, நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்ட நான், தேவ வசனத்தால் என் வழியை நான் காத்துக் கொள்ளும்படி, உணர்வுள்ள இருதயத்தையும் தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | ஆடி 15 📖 மாலை வாசகம் – 1 யோவான் 1:7 – 9

# துணிகரமாக வாழ்கின்றவர்கள்

சக விசுவாசிகளோடு ஐக்கியமாகவும் ஒரே சிந்தையாகவும் இருக்க வேண்டும் என்பதைக் குறித்து நாம் தியானித்து வருகின்றறோம். ஆனால், வேறு விதமாக சிந்திக்கின்ற விசுவாசியைக் குறித்து என்ன செய்வது? கொரிந்து சபையிலே உள்ள விசுவாசிகளுக்கு தேவ ஊழிய க்காரனாகிய பவுல் எழுதும் போது, உங்களுக்குள்ளே வெளிப்ப டையாக மோக பாவம் செய்கி ன்றவர்கள் உண்டென்று பிரசித் தமாய்ச் சொல்லப்படுகிறதே. இப்படிப்பட்ட காரியஞ்செய்த வனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப்படைந்திருக்கிறீர்கள். ஆம் இத்தகைய செயலை இன்றைய நாட்களிலும் அன்பு என்று சிலர் சொல்லிக் கொள்கின்றார்கள். ஆனால், அது பாவத்தைக் குறித்த உணர்வற்ற கடின இருதயமும், இறுமாப்பும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. மேலும் அவர் கூறுகையில், “நீங்கள் மேன்மைபாராட்டுகிறது நல்லதல்ல. கொஞ்சம் புளித்தமா பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? விபசாரக் காரரோடே கலந்திருக்கக்கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதி னேன். ஆனாலும், இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், பொருளாசைக் காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர் இவர்களோடு எவ்வ ளவும் கலந்திருக்கக்கூடாதென்று நான் எழுதவில்லை. அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப்போகவேண்டியதாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராத னைக் காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள் ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது. அப் படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது. புறம்பே இருக்கிறவர்க ளைக் குறித்துத் தீர்ப்புச்செய்கிறது என் காரியமா? உள்ளே இருக் கிறவர்க ளைக்குறித்தல்லவோ நீங்கள் தீர்ப்புச்செய்கிறீர்கள்? புறம்பே இருக்கிற வர்களைக்குறித்து தேவனே தீர்ப்புச்செய்வார். ஆகையால் அந்தப் பொல்லாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப்போடுங்கள் என்று கூறியிருக்கின்றார். ஒருவன் பாவம் செய்தால் அவன், மனம் வருந்தி, மனம்திரும்பி தன் பாவங்களை தேவனிடத்தில் அறிக்கையிட்டால், பாவ ங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். ஆனால் அவன் பாவத்திலே துணிகரமாக வாழும்படி தீர்மானித்தி ருந் தால், அவனைக் குறித்து மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாயிருங்கள்.

**1 கொரிந்தியர் 5:6**

கொஞ்சம் புளித்தமா பிசைந் தமா முழுவதையும் புளிப்பா க்குமென்று அறியீர்களா?

**ஜெபம்:** பரிசுத்தத்திற்கென்று என்னை அழைத்த தேவனே, என்னுடைய மனதின் உணர்வுகளின்படியல்ல, உம்முடைய வார்த்தையின்படி அன்பு ள்ளவனாக இருக்க என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனந்திரும்பும் இருதயம்

ஒரு பாடசாலையிலே கல்வி கற்று வந்த இரண்டு மாணவர்கள், ஆரம்ப நாட்களிலிருந்து நண்பர்களாக இருந்தார்கள். கல்வி, விளையாட்டுதுறை, மற்றும் இதர நிகழ்ச்சிகளில் இவர்கள் சிறந்து விளங்கினார். ஆதனால், அந்த பாடசாலையிலுள்ள அநேகருக்கு அவர்கள் அறிமுகமான வர்க ளாக இருந்து வந்தார்கள். வாலிப நாட்களிலே, ஒரு குறிப்பிட்ட பரீட்சை நடக்கும்போது, அவர்கள் நெறிமுறையற்ற வகையிலே பரீட்சையை எழுத முயற்சி செய்த போது, கையும் களவுமாக அகப் பட்டுவிட்டார்கள். பாடசாலையின் அதிபர்அவர்களை அழைத்து அவ ர்களோடு பேசிய போது, ஒருவன் தன்னுடைய தவறான நடத்தையைக் குறித்து மனம்வருந்தி, துக்கம டைந்தான். ஆனால், மற்றவனோ, தான் செய்த தவறை பெரிது படுத் தாமல், தன் நிலைமையை எப்படி யாவது நியாயப்படுத்த முயன்றான். தன்னுடைய குற்றத்தை மறக்க வேறு யாரையெல்லாம் அதற்குள் இழுத்துக் கொள்ளலாம் என்று முயற்சி செய்தான். நீங்கள் அந்த அதிபரின் நிலையில் இருந்தால் இந்த மாணவர்களைக் குறித்த உங்கள் மனநிலை எப்படியாக இருக்கும்? ஒருவேளை, அந்த மாணவன் இளவயதையுடையவன், அவன் காலத்திலே உணர்வடைவான் என்று கூறிக் கொள்ளலாம். ஆனால், முதிர்ச்சியடைந்த விசுவாசிகள் மத்தியி லும், தங்கள் குற்றங்களை மறைத்து, தங்கள் வழிகளை நியாயப்படுத்து கின்றவர்களை நீங்கள் கண்டிருப் பீர்கள். ஒருவனும் கெட்டுப்போகாமல் மனந்திரும்ப வேண்டும் என் தேவனாகிய கர்த்தர் பொறுமையுள்ளவராக இருக்கின்றார். சில வேளைகளிலே, சபை ஐக்கியங்களிலும் மற்றய விசுவாசிகளும் பொறுமையுள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், ஒருவன் தன் குற்றங்களை மறைத்து, நியாயப்படுத்துகின்றவனாக இரு ந்தால், அவனுடைய முடிவானது, கர்த்தரோடு சிலுவையில் இடப்பக் கமாக இருந்த கள்வனுக்கு ஒத்ததாக இருக்கும். பிரியமானவர்களே, பெலீனர்களை நாம் தாங்க வேண்டும். பெலனற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஆனால், சிலருக்கு நீங்கள் செய்யும் ஆலோச னையாது பன்றிகளுக்கு முன்பாக எறியும் முத்தைப் போல இருக்கும். அது உங்கள் ஆலோசனையும் அசட்டை பண்ணி, திரும்பி, உங்க ளையும் தாக்கி காயப்படுத்திபோடும் என்று பிலிப்பியர் 2ம் அதிகாரத் திலே தியானித்தோம்.

**நீதிமொழிகள் 28:13**

தன் பாவங்களை மறைக்கிற வன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.

**ஜெபம்**: சகலமும் அறிந்த சர்வ வல்லமையுள்ள தேவனே, ஆவிக்கு ரியவன் சகலத்தையும் நிதானித்தறிவதுபோல, நானும் பொல்லாத வேலையாட்களுடைய வலைக்குள் அகப்படாதபடிக்கு என்னைக் காத்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீதிமானின் கடிந்து கொள்ளுதல்

"என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன் ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை. என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள். இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார் அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்." என்று தேவ ஊழியக்காரனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய 1ம் நிருபத்தில் 4ம் அதிகாரத்திலே கூறியிருக்கின்றார். எனவே, எவரையும் நியாந்தீர்ப்பது விசுவாசிகளுக்குரியதல்ல. ஆனால், கண்டிப்பு, கடிந்து கொள்ளுதல், சீர்திருத்தங்கள் போன்றவை ஒரு மனுஷனை நியாயந்தீர்க்கும் காரியமல்ல. எடுத்துக்காட்டாக, கிழக்கு திசையிலுள்ள ஊருக்கு போகின்றேன் என்று கூறிக்ககொண்டு, எதிராக மேற்குப் பக்கமாக வண்டிலிலே பயணம் செய்கின்ற ஒரு மனுஷனைப் பார்த்து, நீ பயணிக்கும் திசையை மாற்ற வேண்டும் என்று கூறுவது, நியாயந்தீர்ப்பு அல்ல. ஒன்றும் ஒன்றும் ஐந்து என்று சிறு பையனானவன் கூறும் போது, அந்த பதில் தவறு, உண்மையான பதில் இரண்டு என்று திருத்துவது, அந்த சிறு பையனை நியாயந்தீர்பபது அல்ல. மாறாக அவனுக்கு கற்றுக் கொடுப்பதாகும். விசுவாசிகளாகிய நாம், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்ல வேண்டும், திடனற்றவர்களைத் தேற்ற வேண்டும், பலவீனரைத் தாங்க வேண்டும். எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருக்க வேண்டும் என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். யாருக்கு நீங்கள் புத்தி சொல்ல வேண்டும்? யாரைத் வேத வார்த்தைகளால் தேற்ற முடியும்? எந்த சூழ்நிலையிலும், வேத வார்த்தைகளை கேட்கும் போது, அதற்கு கீழ்படியமனதுள்ளவர்கள், எனக்கு எல்லாம் தெரியும் என்று கூறாமல் மனத்தாழ்மையோடு கற்றுக்கொள்ள மனதுள்ளவர்கள், நீதிமான்களின் கடிந்து கொள்ளுதலை விரும்புகின்றவர்கள், கடிந்து கொள்ளும்போது தங்கள் பிடரியை கடினப்படுத்தாதவர்கள். இப்படிப்பட்டவர்களுக்கு நீங்கள் ஆலோசனைகளையும், புத்திமதிகளையும் கூறுவது பிரயோஜனமுள்ளதாக இருக்கும். நம்முடைய ஆண்டவராகிய இயேசுவும், ஆலோசனைகளைக் கூறும் போது, கேட்கச் செவியுள்ளவன் கேட்கக்கடவன் என்று கூறியிருக்கின்றார். வழியை விட்டு விலகுகிறவனுக்குப் புத்திமதி விசனமாயிருக்கும்.

**நீதிமொழிகள் 15:31**

**ஜீவனுக்கேதுவான கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானிகளிடத்தே தங்கும்.**

**ஜெபம்**: உன்னதமான தேவனே, ஜீவனுக்கேதுவான கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் செவிகளை எனக்கு தந்து, உம்முடைய சத்திய வார்த்தைகளுக்கு கீழ்படியும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வேத வார்த்தைகளின் நோக்கம்

வேதவார்த்தைகள் விசுவாசிகளை நித்திய ஜீவனுக்கு வழிநடத்துகின்றது. அதுவே வேத வார்த்தைகளின் பிரதானமான நோக்கமாகும். எனவே, அயலவர்களுக்கு உதவி செய்யாமல் இருக்கும்படிக்கு காரணங்களை தேடும்படி வேத வார்த்தைகளை கற்றுக் கொள்ளாமல், அயலவர்களுக்கு தேவ சித்தத்தின்படி உதவி செய்தெப்படி என்பதை அறிந்து கொள்ளும்படி வேதத்தை கற்றுக் கொள்ளுங்கள். அதனால், உலகமும் முழுவதும் என்னுடைய தோளில் மேல் தான் தங்கியிருக்கின்றது. உலகத்திலுள்ள எல்லா வறியவர்களுக்கு உதவி செய்வது என்னுடைய பொறுப்பு. உலகம் முழுவதும் நற்செய்தியை பிரசங்கிப்பது என்னுடைய கையில் தான் இருக்கின்றது என்று சிலர் எண்ணிக் கொண்டு, தங்கள் இருதயத்திலே குழப்பமடைந்து கொண்டிருப்பது போல, நீங்கள் குழப்பமடையாமல், உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். பிரதானமான அழைப்பு பரலோகத்திலே நித்திய ஜீவனை அடைவது. அந்த பிரதானமான நோக்கத்திற்குள், இந்த பூமியிலே நாம் வாழும்வரை நடத்தி முடிக்க வேண்டிய கிரியைகள் உண்டு. அவைகளை நம்முடைய விருப்பத்தின்படியல்ல, மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளும்படி அல்ல, தேவ சித்தத்தின்படி, தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கும்படி நற்கிரியைகளை நாம் நடப்பிக்க வேண்டும். உலகத்திலுள்ள ஆத்துமாக்கள் முழுவதையும் இரட்சிக்க முயற்சி செய்வதற்கு முன்னதாக, அவரவர் தங்களுடையதை கெட்டுப்போகாமல் காத்துக் கொள்ள வேண்டும். "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார். பிரியமானவர்களே, கர்த்தருக்குள் ஒரே சிந்தையை இருப்பதை குறித்து தியானித்து வருகின்றோம். அந்த சிந்தையானது கிறிஸ்துவின் சிந்தை. ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின் சிந்தையை தரித்தவர்களாக காணப்பட வேண்டும். பரலோகத்திலிருந்து நம்முடைய இரட்சகராயிருக்கின்ற ஆண்டவராகிய இயேசு வெளிப்பட ஆயத்தத்தோடு காத்திருப்பவர்களாக காணப்படுவோமாக.

**மத்தேயு 16:26**

**மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?**

**ஜெபம்:** அன்பின் தேவனே, என்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், எனக்கு நீர் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் இருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்

கிறிஸ்துவின் நற்செய்தியின் நிமித்தம் கட்டப்பட்டிருக்கின்ற தேவ ஊழியராகிய பவுல் ரோமாபுரியிலுள்ள சிறையிலிருந்து, பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தை மையமாக வைத்து, தேவ வார்த்தைகளையும், விசுவாசிகளின் வாழ்வின் கருப்பொருளையும் தியானித்து வருகின்றோம். சிறையிலே இருக்கும் அவருக்கு, முறுமுறுபதற்கும், முறையிடுவதற்கும் அவர் வாழ்விலே துன்பங்கள் இருந்தது. பல பாடுகளையும் உபத்திரவங்களையும் கடந்து வந்தார். அந்த நிலைமையிலும், 'கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்' என்று விசுவாசிகளை உற்சாகப்படுததுகின்றார். பிலிப்பிய சபையிலுள்ள விசுவாசிகள் மத்தியிலே சில பிரச்சனைகள் இருந்து வந்தது. பிரிவினைகள இருந்தது. பொல்லாத வேலையாட்களும், பின்மாற்றக் காரரும், விட்டு வந்த மதக் கிரியைகளுக்கு திரும்புகின்றவர்களும் இருந்தார்கள். தங்கள் தராதரங்களைக் குறித்து பெருமை பாராட்டுகின்றவர்கள் இருந்தார்கள். கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே எப்படிப்பட்ட மனிதர்கள் விசுவாசிகளை சூழ இருந்தாலும், விசுவாசிகள் முன்னானவைகளை நாடி ஓட வேண்டும். கிறிஸ்துவை ஆதயப்படுத்திக் கொள்ளும்படி, உலக மேன்மைகளை விட்டுவிட வேண்டும். கிறிஸ்துவின் சிந்தையை தரித்தவர்களாக, இரட்சகராயிருக்கின்ற இயேசு கிறிஸ்து வெளிப்பட காத்திருக்கும் விசுவாசிகள், தங்கள் பெயர்கள் ஜீவ புத்தகத்திலே எழுதியிருக்கின்றது என்பதை உணர்ந்தவர்களாக கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டும். பிலிப்பியர் 3ம் அதிகாரத்தின் ஆரம்பத்திலே குறிப்பிட்டது போல, மறும்படியும், பிலிப்பியர் 4ம் அதிகாரத்திலே, "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்." என்று வலியுறுத்தி கூறுகின்றார். பிரியமானவர்களே, உங்களுடைய வாழ்க்கையிலும், சபைக்கு வெளியே உலகத்திலே அநேக காரியங்கள் நடக்கலாம்,சபைக்குள்ளே சில முரண்பாடுகள் உண்டாயிருக்கலாம். நீங்களோ, உங்கள் மனதை குழப்பிக் கொள்ளாமல், விசுவாசத்தை அறிக்கை பண்ணுகின்றதிலே உறுதியாய் இருந்து, கிறிஸ்துவின் சிந்தையை தரித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது என்பதினாலே, உங்களை அழுத்தும் உலக பாரங்களினாலே மனம் சோர்ந்து போகாமல், கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்.

**பிலிப்பியர் 4:4**

**கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, உலக கவலையினாலும் பெருந்திண்டியினாலும் என்னும் மனம் பாராட்பட்டு சோர்ந்து போகாமல், உம்முடைய நாளுக்கென்று ஆயத்தமு ள்ளவனாக இருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – 2 தீமோ 2:4

# தனக்கடுத்த காரிங்கள்

இந்த உலகத்திலே உத்தமாக தங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றும் நீதிபதிகள் இருக்கின்றார்கள். அதுபோலவே, சட்டதிட்டங்களை எழுதிய நோக்கத்தின்படி கடைப்பிடிக்கின்ற சட்டத்தரணிகள் இருக்கின்றார்கள். ஆனால், எல்லா மனிதர்களும் நீதிபதிகளா? எல்லா மனிதர்களும் சட்டத்தரணிகளா? அயலிலுள்ள மனிதனொ ருவன் குற்றச் செயலில் அகப்பட்டு, பொலிசாரால் கைது செய்யப்பட்டு, அவனுக்கெதிராக வழக்கு தொடுக்கப்பட்டால், அவனுக்கோ, அல்லது அவன் குடும்பத்திற்கோ நீங்கள் கூறும் ஆலோசனை என்ன? அல்லது எப்படி ஆதரவாக இருப்பீர்கள்? பொலிசாரோடு சென்று வாக்குவாதம் செய்வீர்களா? நீதிமன்றத்திற்கு சென்று குழப்பம் செய்வீர்களா? இவைகள் மதியீனமாக இருக்கும ல்லவா! காரியங்கள் உங்கள் பெலத்திற்கு மேற்பட்டதாக இருக்கும் போது, அதற்குரியவர்களை நாடும்படி ஆலோசனை கூறுவீர்களல்லவா? பிரியமானவர்களே, சபை ஐக்கியங்களிலே குழப்பங்களும் கலகங்களும் உண்டாக காரணம் என்ன? பொதுவாக, விசுவாசிகள், தங்கள் அழைப்பை மறந்து,தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவர்களாய் எண்ணாமல், தங்களைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணி, கிறிஸ்துவின் சிந்தையை விட்டு விலகி, தங்கள் கொள்கை கோட்பாடுகளுக்கென்று ஒழு குழுவை ஏற்படுத்துவதால், அங்கே வேற்றுமைகளும், விவாதங்களும், பிரிவினைகளும் உண்டாகின்றது. பிரிமான விசுவாசிகளே, ஒரு விசுவாசி உங்களிடத்தில் வந்து, தன்னை மற்றவர்கள் ஒடுக்குகின்றார்கள் என்று கூறினால், நீங்கள் என்ன செய்வீர்கள்? சற்று சிந்தித்து செயற்படுங்கள். உங்கள் அழைப்பு இன்னதென்று அறிந்து கொள்ளுங்கள். காரியங்களைஉ ங்கள் கரங்களிலே எடுத்துக் கொள்ளாமல், வேத வசனத்தின் வெளிச்சத்திலே ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் அறியாதவைகளிலே உங்கள் நியாயங்களை கூறாமல், நிதானமாய் நடக்க சத்திய ஆவியாவரின் உதவியை நாடுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசிகள் யாவரும் கிருபாசனத்தண்டைக்கு சேரும் பாக்கியத்தை பெற்றிருகின்றறோம். எனவே, உங்கள் கவலைகளை தேவனிடத்தில் தெரியப்படுத்துங்கள். கர்த்தருக்குள் உண்டான சந்தோஷத்தை இழந்து போகாமல், உங்கள் இருதயத்தை எல்லா கவலோடும் காத்துக் கொள்ளுங்கள்.

**ரோமர் 12:8**

புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்;

**ஜெபம்:** நீதியின் தேவனே, என்னுடைய மாம்ச உணர்வுகளின்படி நடந்து, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளாமல், நிதானமாய் ஜீவனம் பண்ண எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அவயவங்களின் தொழில் வேறுபட்டது

ஒரு பாடசாலையிலே கல்விகற்று வந்த மாணவனொருவன், பொதுவாக எல்லா காரியங்களிலேயும் தன் பெற்றோருக்கு கீழ்படிந்து நடக்கின்ற வனாக காணப்பட்டான். ஒரு நாள், பாடசாலையின் அதிபரிடத்திலிருந்து பெற்றோருக்கு அழைப்பு வந்தது. அந்த மாணவனுடைய தகப்ப னானவர், அந்த அதிபரோடு பேசினார். ஆதிபர்: பாடசாலையில் அவர்க ளுடைய மகனானவனுக்கும் இன் னுமொரு மாணவனுக்கும் இடை யிலே நடந்த சண்டையை குறித்து கூறி, அதைபற்றி பேசுவதற்காக பாடசாலைக்கு வரும்படி கேட்டுக் கொண்டார். ஆன்றிரவு, பெற்றோர் தங்கள் மகனானவனை அழைத்து, அந்த கைகலப்பு எப்படி ஆரம் பத்தது என்று பல தடவைகள் கேட்டார்கள். அவனோ, தான் அதை ஆரம்பிக்கவில்லை, மற்றவனே எனக்கு அடித்தான் என்று உறுதியாய் கூறினான். அவனுடைய நண்பர்களும் சாட்சியாக நின்று அவ்வாறு கூறினார்கள். மறுநாள், பாடாலைக்கு பெற்றோர் சென்று அதிபரோட கலந்துரையாடிய போது, சம்பவத்தின் மற்றய பக்கத்தை அறிந்து கொண்டார்கள். உண்மையிலே மற்ற மாணவனே கைகலப்பை ஆரம் பித்தான். ஆனால், அநேக நாட்களாக, இவர்களுடைய மகனானவன், தன் நண்பர்களோடு சேர்ந்து, அவனை கேலி செய்து, அவனை கோபமூட்டி வந்தார்கள். குற்றமானது, மற்றய மாணவனை சாரும்படி இவர்களுடைய மகனானவன், மற்றவன் சண்டையை ஆரம்பிக்கும்படி காத்திருந்தான். கிறிஸ்துவின் சிந்தையை தரித்திருக்கும்படி அழைப்பை பெற்ற அருமையான விசுவாசிகளே, மேலே கூறப்பட்ட சம்பத்தின் கருபொருளாவது, பொதுவாக, எவரும் தங்கள் குற்றங் குறைகளை பூரணமான கூறுவதில்லை. இதற்கு விசுவாசிகள் விதிவிலக்கானவர்கள் அல்ல. எனவே, குற்றங் குறைகளை காணும் போது, நீங்கள் நியாயா திபதிகளாகி விடாதிருங்கள். நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாக இருக்கின்றோம். நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவ யவங்களிருந்தும், எல்லா அவய வங்களுக்கும் ஒரே தொழில் இராத துபோல, வெவ்வேறு அவயவங் களாக இருக்கின்றோம். குறைகள் குற்றங்களை காணும்போது, உங்கள் மனதின் ஆதங்கங்களை கர்த் தரிடத்தில் தெரியப்படுத்துங்கள். அவருக்குள் சந்தோஷமாயிரு ங்கள். பொறுமையாய் இருங்கள். அழைத்த தேவனே நீதியுள்ள நியா யாதிபதியாக இருக்கின்றார்.

**ரோமர் 12:5**

**அநேகராகிய நாமும் கிறிஸ் துவுக்குள் ஒரே சரீரமாயிரு க்க, ஒருவருக்கொருவர் அவ யவங்களாயிருக்கிறோம்.**

**ஜெபம்:** ஞானதின் ஆவியை அருளுகின்ற தேவனே, சோதனையின் நாளிலே, என்னுடைய உணர்வுகளின்படி நடவமால், உம்முடைய வார்த் தையின் வழியிலே நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | ஆடி 22 | 📖 மாலை வாசகம் – கலாத்தியர் 5:16

# சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்

யார் அதிகமாகவும், உண்மையாவும் சபையை நேசிக்கின்றார்கள்? நானா? முற்ற விசுவாசிகளா? மேய்ப்பரா? நிர்வார்க குழுவினரா? அல்லது கிறிஸ்துவா? ஒவ்வொரு விசுவாசிகயின் வாழ்க்கையிலும் நடக்கும் சம்பவங்களையும் யார் நன்றாக அறிந்திருக்கின்றார்கள்? இருதங்களை ஆராய்தறிக்கின்றவர் யார்? விசுவாசிகளுடைய சிந்தையை அறிந்தவர் யார்? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே, தம்முடைய விலைமதிக்க முடியாத இரத்தத்தை சிந்தி, தம்முடைய ஜீவனை கொடுத்தார். எனவே, அவர் யாவற்றையும் அறிந்திருக்கின்றார். ஒவ்வொருவருடைய எண்ணங்களையும் அதன் நோக்கங்களையும் அறிந்திருக்கின்றார். அவருடைய கண்களுக்கு யார் தப்பிக்கொள்ளகூடும்? கிறிஸ்துவின் சிந்தையை தரித்தவர்கள் இதை அதிகமாக உணர்ந்து கொள்ளுவார்கள்.

**கொலோசெயர் 1:18**

அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.

எனவே சபையிலே நீதி நியாயங்கள் சமரசம் செய்யப்படுகின்றது என்று நீங்கள் அறிந்து கொள்ளும் போது, கிறிஸ்துவே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். கிருபையின் நாட்களிலே, அவருடைய நீடிய பொறுமைய அசட்டை செய்கின்றவர்கள், அவர் முன்குறித்த நாளிலே அதற்குரிய பலனை அடைவார்கள். கிறிஸ்துவின் சிந்தை உறுதியாய் உங்களில் நிலைத்திருக்ககடவதாக. தேவ ஊழியராகிய பவுல், ஆண்டவராகிய இயேசுவை அறிய முன்னதாக சபையோரை துன்பப்படுத்தி, சபையை பாழாக்கிக் கொண்டிருந்தார். ஆண்டவரரிகிய இயேசு அவரை சந்ததித்த நாளிலே பவுலை நோக்கி: நீ ஏன் என்னை துன்ப படுத்துகின்றாய்? முள்ளிலே உதைப்பது உனக்கு கடினம் என்று கூறினார். “உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது. உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளினாலல்லவா?” என்று யாக்கோபு எழுதின நிருபம் 4ம் அதிகாரத்திலே வாசிக்கின்றோம். விசுவாசிகளுடைய போராயுதம் மாம்ச பெலன் அல்ல என்பதை உணர்ந்தவர்களாக, ஆவியின் சிந்தையை தரித்து, ஆவிக்குரிய போராட்டத்திலே, நல்ல போராட்டத்தை போராடுங்கள். உங்கள் விசுவாசத்தை காத்துக் கொள்ளுங்கள். உங்களை அழுத்தும் பாரங்களை உதறி தள்ளிவிட்டு, பந்தைய பொருளை நோக்கி முன்னேறுங்கள்.

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, எனக்கு மிஞ்சின காரியங்களினாலே என் மனம் பாராப்பட்டு, சோர்ந்து போகாமல், நீர் என்னை அழைத்த நோக்கத்தை நிறைவேற்ற எனக்கு பெலன் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உலகத்தை ஜெயித்த கிறிஸ்து

நித்திய கனமகிமைக்கென்று அழைக்கப்பட்ட அருமையான விசுவாசிகளே,இன்று உங்கள் சந்தோஷத்தை கெடுக்கும் செய்தி என்ன? உங்கள் மனதை கவலைக்குள்ளாக்கும் காரியம் என்ன? இந்த உலகத்தில் வாழ்வதற்கு தேவையானவைகளை குறித்து கவலையடைகின்றீர்களா? எதிர்கால பயங்கள் உங்களை வாட்டுகின்றதா? "என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள் இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். நீதி நியாயங்களின் நிமித்தம் துன்பப்பட்டு சோர்ந்து போகின்றீர்களா? நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் பரலோகராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு, களிகூருங்கள் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே என்று கூறியிருக்கின்றார். கடைசி நாட்களிலே வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள் துர்செய்திகளை கேட்டு கலங்கி போகாதிருங்கள். யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள் கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள் இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே. ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும் பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். நம்மை அழைத்தவரோ உண்மையுள்ளவர். அவர் எல்லாவற்றிலும் நமக்கு எல்லாமாக இருக்கின்றார். நாம் காண்கின்ற உலகம் அநித்தியமானது. அது போலவே, அதினால் உண்டாகும் உபத்திரவங்களும் துன்பங்களும் நீடித்திருக்காமு. நித்திய கனமகிமையை நாடி சென்றுகொண்டிருக்கும் நமக்கு, இந்த உலகத்தின் வேஷம் அதி சீக்கிரத்தில் கடந்து போகும். எனவே கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்.

**யோவான் 16:33**

**உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.**

**ஜெபம்:** உன்னதமாக தேவனே, நான் சோர்ந்துபோகாமல், என்னுடைய புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாகும்படி வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சாந்தகுணம் வெளிப்படட்டும்

உங்கள் வாழ்க்கையிலே, உங்கள் குடும்பம், நண்பர்கள், உறவினர்கள் மத்தியிலே, கருத்து முரண்பாடுகள் ஏற்படாத ஒரு பருவத்தை கூறு முடியுமா? கூடி ஆராதிக்கும் சபை ஐக்கியத்திலே விசுவாசிகள், ஊழியர்கள் மத்தியிலே கருத்து முரண்பாடுகள் இல்லாமல் இருந்த ஆண்டுகளை குறிப்பிட்டு கூற முடியுமா? விசுவாச குடும்பத்தினர் கல்வி கற்றும் இடத்திலே, வேலை செய்யும் இடங்களிலே, நண்பர்கள், உறவினர்கள் மத்தியிலே, வெளி இடங்களிலே, சபை ஐக்கியங்களிலே பொதவாக ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து கருத்து முரண்பாடுகள் ஏற்படுவது உண்டு. ஒருவேளைஅந்தக் காரியங்கள் ஆகாதவைகளும், அற்பமானவைகளுமாக இருக்கலாம். சில வேளைகளிலே சபை ஐக்கியங்களிலே, விசுவாசிகள் மத்தியிலே இப்படியான சம்பாஷைகள் ஏற்படுவதுண்டு. இவைகளளை குறித்து வேதம் கூறுவதாவது: “சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி, தேவபக்திக்கேதுவாக முயற்சிபண்ணு.” “கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம் பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.” “அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள் ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்.” “ஆகாத சம்பாஷனைகள் நல்லொழுக்கத்தை கெடுக்கும்” எனவே, இப்படியான காரியங்களிலே கருத்து முரண்பாடுகளும், வாக்குவாதங்களும் உண்டாவது, எந்த விதத்திலும் விசுவாசிக ஏற்புடையதல்ல. ஆனால், சில வேளைகளிலே தேவ காரியங்களைக் குறித்த காரியங்களிலே, விளக்கம் இல்லாத வேளைகளிலே கருத்து முரண்பாடுகளும், வேறுபட்ட சிந்தைகளும் உண்டாக கூடிய சந்தர்பங்கள் உண்டாகிய விடுகின்றது. அப்படியாக சந்தர்பங்களிலே, தேவ பிள்ளைகள், நல்லொழுக்கத்தோடும், அமைதலுள்ள ஆவியோடும், காரியங்கள் குறித்து பேச கற்றுக் கொள்ள வேண்டும். வாக்குவாதங்களும், சண்டைகளும், கலகங்களும், பிரிவினைகளும் பரிசுத்தவான்களுக்கு ஏற்புடையதல்ல.எனவே, “யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள். மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே.” “உங்கள் சாந்தகுணம் எல்லா மனு‘ருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.”

**பிலிப்பியர் 4:5**

**உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, என் உள்ளத்தில் நாட்டப்பட் டதாயும் என் ஆத்துமாவை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற உம் வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொண்டு நடக்க உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தெய்வீக சுபாவங்கள் வளர வேண்டும்

சில மனிதர்கள் இயற்கையாகவே உடல் வலிமையுடையவர்கள், வேறு சிலர், தங்கள் உடல் வலிமையை மேம்படுத்த சத்துள்ள உணவு வகைகளை உட்கொண்டு, ஒழுங்காக உடற்பயிற்சிகளை எடுத்துக் கொள்வார்கள். பிறப்பிலே இசை ஞானத்தை உடையவர்கள் இருக்கின்றார்கள். சிலர் இசை ஞானத்தை பயிற்சியினால் பெற்றுக் கொள்கின்றார்கள். இவைகளுக்கு விசுவாசிகள்விதிவிலக்கானவர்கள் அல்ல. உடல் களைப்படையும் போது, மனிதர்கள் இளைப்பாறுகின்றார்கள். இது எங்களுக்குரியதல்ல என்று விசுவாசிகள் கூற முடியுமா? இல்லை. உடல் களைப்போடு வேலைகளை செய்யும் போது, மனிதர்களுக்கு சீக்கிரமாக சினம் உண்டாகிவிடுகின்றது. வழமையான நேர்த்தியான செய்யும் வேலைகளிலே இலகுவாக தவறுகளும், குறைகளும் உண்டாகிவிடுகி ன்றது. காரியங்களை நிதானித்து அறிய முடியாமல் மூளை களைத்தி ருக்கும் போது, மனிதர்கள் இடைவேளைகளையும் எடுத்து, இளைப் பாறிக் கொள்கின்றார்கள். இவைகள் மனிதர்களுக்கு உண்டாகியிருக்கும் இயற்கை நியதிகள். தேவன்தாமே இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களை தம்முடையவர்கள் மத்தியிலே நடப்பிக்க வல்லமையுள்ளவராக இருக்கின்றார். அப்படியாக தேவை ஏற்படும் போது நடத்தி வருகின்றார். ஆனால், பொதுவாக, விசுவாசிகளாகிய நாமும், வாழ்க்கையின் அடிப்படை பிரமாணங்களுக்கு உட்பட்டிருக்கின்றோம். ஒரு விசுவாசியானவன், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானம் பெற்ற நாளிலே, முற்றிலும் தேறினவனாகி விடுகின்றானா? அல்லது அப்படி ஒரே நாளிலே தேற வேண்டும் என்று தேவனாகிய கர்த்தர் எதிர்பார்கின்றாரா? இல்லை. உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகின்றது. தேவவசனத்தை பின்பற்றுகின்றவர்கள் தங்கள் மாம்ச சுபாவங்களிலிருந்து விடுதலையடைகின்றார்கள். மனம் புதிதாகிறதினாலே மறுரூபம் அடைகின்றார்கள். அவ்வண்ணமாகவே, கடினமான சூழ்நிலைகள் மத்தியிலும், சாந்தகுணமானது விசுவாசிகளிலே உருவாக வேண்டும். கருத்து முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்கு குறித்த நேரமும், பேச்சு முறைமையும் உண்டு. இவைகளிலே விசுவா சிகள் நாளுக்கு நாள் வளர்ந்து பெருக வேண்டும்.

**ரோமர் 12:2**

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதா கிறதினாலேமறுரூபமாகுங்கள்.**

**ஜெபம்:** நன்மையான ஈவுகளை உம்முடைய பிள்ளைகளுக்கு கொடுக்கும் தேவனே, நான் காரியங்களை நிதானித்து அறியும்படிக்கு, தூய ஆவியின் வழிடத்துதலை எனக்கு தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சிறிய ஆரம்பங்கள்...

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த உடல் வலிமையுள்ள மனிதனொருவன் முற்கோபியாக இருந்தான். ஒருநாள், அந்த ஊரிலேயுள்ள அவனுடைய உறவினர்களில் ஒருவன், உடல் வலிமையுள்ள இந்த மனிதனுக்கு எதிராக ஒரு காரியத்தை செய்து விட்டான். மூர்க்கத்தோடு, அவனுடைய வீட்டிற்கு விரைந்து செல்ல ஆயத்தப்பட்டபோது, அவனுடைய நண்பனானவன், அவனை தடுத்து, நண்பா, பொழுதுபட்டுவிட்டது. இன்றிரவு வேண்டாம், விடியும்வரை காத்திரு. காலையிலேபிரச்சனையை தீர்ப்பதற்கு நானும் உன்னோடு வருகின்றேன் என்று கூறினான். அவன் கோபத்தை அடக்க முடியவில்லை. ஆனாலும், அவனுடைய நண்பன் அவனை எப்படியோ நிறுதிவிட்டான். காலையிலே எழுந்த போது, அவன் கோபம் தணிந்துவிட்டது. தன் உறவினனை தாக்க வேண்டும். அடிக்க வேண்டும் என்ற எண்ணம் அவனைவிட்டு நீங்கிவிட்டது. தான் அந்த இடத்திற்கு போயிருந்தால், பெரிதான விபரீதங்கள் ஏற்பட்டிருக்கும் என்று உணர்ந்து, தன் நண்பனுக்கு நன்றி செலுத்தினான். நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்ட தேவ பிள்ளைகளே, களவு எடுக்க வேண்டும் என்ற எண்ணம் வரும் போது அதை உடனே செய்து முடிக்க வேண்டும் என்று கூறிக் கொள்வது சரியாகுமா? அதுபோலே, கோபம், சண்டை, மோக பாவ எண்ணங்கள் போன்ற மாம்ச இச்சைகளைக்கு உடனே இடம் கொடுத்துவிடுவீர்ககளா? இவைகளை தடுத்து நிறுத்தும் வழிகளை தேடுவீர்கள் அல்லவோ? கொலை பாதகத்தின் நிமித்தம் சிறைக்கு சென்ற ஒரு மனிதானாவன், “இரண்டு நிமிடங்கள் என் கோபத்தை அடக்க முடியாததினாலே இந்த பாதக செயலை செய்துவிட்டேன்” என்று கூறி மனம் கசந்து அழுதான். இது உண்மையான கூற்று. ஆனால், அந்த மனிதனானவன், தன் வாலிப வயதிலிருந்து, தன் கோபத்தை அடக்க முயற்சி செய்யாமல், கிடைக்கும் சந்தர்பங்களிளெல்லாம், தன்னை எதிர்கின்றவர்களை அடித்து பழகிவிட்டான். பிரியமானவர்களே, மனம் மறுரூபமாவதற்குரிய வழிகள் யாவற்றையும் தேவன் செய்து கொடுத்திருக்கின்றார். அதை உங்கள் வாழ்விலே சிறிதாக ஆரம்பியுங்கள். மனதில் தோன்றும் இச்சைகள் நிறைவேறுவதற்கு இடம் கொடுக்காதிருங்கள். சத்திய வழியிலே வழிநடத்தும் ஆவியானவர் உங்களோடு இருக்கின்றார். எனவே, ஆவியானவருடைய வழிநடத்துதலுக்கு இடங் கொடுங்கள். அவர் உங்களை வழிநடத்திச் செல்வார்.

**யோவான் 16:13**

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்

**ஜெபம்:** பரிசுத்த ஆவியயை எனக்கு தந்த தேவனே, நான் ஒவ்வொரு நாளும் மறுரூபம் அடைந்து உம்முடைய சாயலிலே வளரும்படிக்கு என்னை உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சாந்தமுள்ள மனம்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த குடியானவனின் குடும்பத்திற்கு அவ்வூரிலுள்ள செல்வாக்குள்ள மனிதனொருவன், தீங்கொன்றை செய்துவிட்டான். அந்த செல்வாக்குள்ள மனிதனை எதிர்த்து பதிலடி கொடுப்பதற்கு அந்தன் குடியானவனுக்கு பெலனோ நிர்வாகமோ இல்லாதிருந்தது. அதனால், அவன் தன் கோபத்தையும் கசப்பையும் தனக்குள் அடக்கி வைத்திருந்தான். தனக்கு நடந்த தீங்கைப் பற்றியோ, அல்லது தீங்கு செய்த அந்த செல்வாக்குள்ள மனிதனைப் பற்றி பேசும்போது, மிகவும் தயவாகவும், அமைதியாகவும் மறுமொழி கொடுத்தான். அதனால், அவன் சாந்த குணமுள்ளவன் என்று சிலர் எண்ணிக் கொண்டார்கள். ஆனால், அவனோ, பழிவாங்குவதற்கு தகுந்த தர்ணம் கிடைக்கும்வரை பொறுமையுள்ளவனாக இருந்தான். இப்படிப்பட்டவர்கள், வெளிப்படையாக தங்கள் கோபத்தை காண்பிக்காமல், மறைமுகமாக தங்கள் கோபத்தை வெளிப்படுத்துபவர்கள். (Passive Aggressive). இது சாந்த குணமல்ல. நிதானமாகவும், அமைதலாகவும் தயவாகவும் பேசிக் கொள்வது, சாந்த குணமுள்ளவர்களின் வெளிப்படையான தன்மைகளாக இருப்பது உண்மை. ஆனால் வெளிப்படையாக நிதானமாகவும், அமைதலாகவும், தயவாகவும் பேசுகின்ற யாவரும் உள்ளத்திலே சாந்த குணமுள்ளவர்களாக இருப்பார்கள் என்று கூற முடியாது. உண்மையிலே சாந்த குணமுள்ளவன், தன் சுயபெலத்தில் தங்கி வாழாமல், ஆண்டவராகிய இயேசுவிலே இணைந்திருப்பதால், அவன் ஆவியிலே எளிமையுள்ளவனாக இருப்பான். அவன் தேவ நம்பிக்கையுள்ளவனாக ஆவியிலே எளிமையுள்ளவளாக இருப்பதினால், தன் குறை, குற்றங்களை, மீறுதல்களை குறித்து, துயரப்பட்டு, மனந்திரும்புகின்றவனாக இருப்பான். அப்படியாக வாழ்பவனின் வாழ்விலே, இக்கட்டும் நெருக்கமும் சூழ்ந்து கொண்டாலும் பிதாவாகிய தேவனின் சித்தம் தன் வாழ்விலே நிறைவேறும்படி, தேவ வார்த்தைக்கு இடம் கொடுப்பான். நன்மைக்கு கைமாறாக மனிதர்கள் அவனுக்கு தீங்கு செய்யும் போது, அவர்களுக்கு பதிலடி கொடுக்க சுய பெலமும், சந்தர்ப்பமும் வாய்தாலும், அவன் தேவனுக்கு பயந்து அவருக்காக காத்திருக்கின்றவனாக இருப்பான். இது கிறிஸ்துவையுடையவர்களுடைய இயற்கை சுபாவமாக மாற வேண்டும். இவைகளை ஆண்டவர் இயேசுவினிடத்திலே கற்றுங் கொள்ளுங்கள்.

**மத்தேயு 11:29**

**நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்**

**ஜெபம்**: அன்பும் இரக்கமுமுள்ள தேவனே, என் இருதயத்திலே உமக்கு வேதனையுண்டாக்கும் வழிகளை வைத்திருக்காமல், உம்முடைய குமாரனாகிய இயேசுவைப் போல வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இருயதத்திலுள்ளவைகள்

"என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக." என்று 19ம் சங்கீதத்திலே வாசிக்கின்றோம். ஒரு விசுவாசியின் வாயின் வார்த்தைகள் மாத்திரமல்ல, அவனுடைய இருதயத்திலுள்ள எண்ணங்களும் ஏக் கங்களும் தேவனுக்கு பிரியமுள்ளதாக இருக்க வேண்டும். தேவனுக்கு முன்பாக, ஒரு விசுவாசியின் வாயின் வார்த்தைகளும், இருதயத்தின் தியானங்களும் வேறுபட்டதாக காணப்படும் போது, அங்கே வெளிவேடம் காணப்படும். அக்காலத்திலே, ஆண்டவராகிய இயேசு தாமே, சில மதத்தலைவகளின் மாய்மாலமான வாழ்க்கை அறிந்து கொண்ட போது, அவர்களை நோக்கி: மாயக்காரரே, உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள் அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனு'ருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார். பிரியமானவர்களே, தேவனாகிய கர்த்தருக்கு மறைவானது ஒன்றுமில்லை. அவர் மனிதர்களுடைய இருதயங்களை ஆராய்ந்து அவர்களுடைய சிந்தையை அறிந்திருக்கின்றார். "என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர் என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர் என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும்.என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்." என்று 139ம் சங்கீதத்திலே சங்கீதக் காரன் பாடியிருக்கின்றார்கள். எனவே, விசுவாசிகளாகிய நாம், நம்முடைய நற்குணங்களை மற்றவர்களுக்கு வெளிக்காட்டும் போது, அவை இருதயத்திலே இருந்து உண்டாக வேண்டும். அவ்வண்ணமாக நம்முடைய சாந்த குணமும், வெளிவேடம் அற்றதாகவும், உண்மையுள்ளதாகவும் மற்றவர்கள் முன்னிலையிலே வெளிப்படுத்தப்பட வேண்டும். வேறுபட்ட எண்ணங்கள் இருதயத்தில் தோன்றும் போது, அவை உங்களை ஆண்டு கொள்ளாதபடிக்கு ஆவியானவரின் துணையை நாடுங்கள். மனம் மறுரூபமாகும்படி அவர் உங்களை வழிநடத்திச் செல்வார்.

**சங்கீதம் 19:14**

**என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.**

**ஜெபம்:** என் இருதயத்தின் நினைவுகளை அறிந்த தேவனே, வெளிவேடமான வாழ்க்கையை நான் வாழாதபடிக்கு, உமக்கும் மற்றவர்களுக்கும் முன்னிலையிலே உண்மையுள்ளனாக இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீங்கள் ஆவிக்குரியவர்கள்...

விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் பரலோகத்திலே நித்திய ஜீவன் என்ற இலக்கின் ஒரே சிந்தையை தரித்திருக்க வேண்டும் என்பதைக் குறித்து தியானித்து வருகின்றோம். வேறு சிந்தைகள் யாவும் மாற்றப்பட வேண் டும். வேற்றுமைகள் யாவும், சாந்தமுள்ள ஆவியோடு தீர்க்கப்பட வேண் டும். அக்காலத்திலே, கொரிந்து சபையிலே விசுவாசிகள் சிலர் மத்தி யிலே வேற்றுமைகள் உண்டாயிருந் தது. அதை தீர்த்து வைப்பதற்கு அவ ர்கள் வேறு வழிகளை தேடினார்கள். அந்த வேளையிலே தேவ ஊழியக் காரனாகிய பவுல்: "உங்களில் ஒரு வனுக்கு வேறொருவனோடே வழக் குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதக்காரரிடத்தில் போகத் துணிகிறதென்ன? பரிசுத்தவான்கள் உல கத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா? தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர் களா? அப்படியிருக்க, இந்த ஜீவனுக்கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக் கொள்ளக்கூடாதிருக்கிறது எப்படி? இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகள் உங்களுக்கு இருந்தால், தீர்ப்புச்செய்கிறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படி இதைச் சொல்லுகிறேன். சகோதரனுக்கும் சகோதர னுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கத்தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா? சகோதரனோடே சகோதரன் வழக்காடு கிறான், அவிசுவாசிகளுக்கு முன்பாகவும் அப்படிச் செய்கிறான். நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கி றது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறதி ல்லை? நீங்களே அநியாயஞ்செய்கிறீர்கள், நஷ்டப்படுத்துகிறீர்கள் சகோ தரருக்கும் அப்படிச் செய்கிறீர்களே. அவர்களை கண்டித்து, ஆலோ சனை கூறினார். நித்திய கனமகிமைக்கென்று அழைப்பை பெற்ற சகோதர சகோதரிகளே, நம்முடைய போராட்டம் ஆவிக்குரிய போரா ட்டம் என்பதை மறந்து போய்விடாதிருங்கள். அவற்றை உலகத்தின் போக்கின்படி தீர்த்து வைப்பதற்கு முயற்சி செய்யாதிருங்கள். உலக மும், மாம்ச இச்சைகளின் முடிவும் கலகத்தையும், கசப்புக்களையும், சண்டைகளையும், பிரிவினையையும் பிறப்பிக்கும்.

**1 கொரிந்தியர் 6:2**

**உலகம் உங்களால் நியா யந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர் க்க நீங்கள் அபாத்திரரா?**

**ஜெபம்:** பரிசுத்த வாழ்க்கை வாழும்படி என்னை வேறு பிரித்த தேவனே, இந்த உலகத்திலே வாழும்வரை நான் ஞானமுள்ளவனாக நடந்து கொள்ளும்படி உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உங்கள் ஆலோசகர் யார்?

ஒரு ஐக்கியத்திலுள்ள இரண்டு விசுவாசிகளுக்கிடையிலே குறிப்பிட்ட காரியத்தைக் குறித்து கருத்து முரண்பாடு, நாளடையிலே பிரிவினையை உண்டாயிற்று. அவர்களில் முதலாவது விசுவாசியாவன், தனக்கு ஆதாரமும், நியாயமும் கிடைக்க வேண்டும் என்று அவிசுவாசியாக இருந்த தன்னுடைய உறவினரிடம் சென்று, சபை ஐக்கியத்தில் நடந்த சம்பவங்களை யாவையும் விளக்கமாக கூறினான். உறவினராக இருந்த அவிசுவாசி, மிகவும் மூர்க்கம் கொண்டு, நீ பயப்படாதே, அடுத்த முறை நான் அந்த மனிதனை சந்திக்கும் போது, இதற்கு ஒரு முடியவை காணச்செய்வேன் என்றான். மற்றய விசுவாசியானவனோ, மனமுடைந்தவனாய், சபையைக் குறித்த பாரமும், விசுவாசிகளின் ஐக்கியம் தங்கள் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டிருகின்றது என்று துக்கமடைந்தான். தன் மனதிலுள்ளவைகள் யாவவையும் தன் தியான வேளையிலே, தேவனுடைய பாதத்திலே இறக்கி வைத்தான். ஆவியானவருடைய வழிடத்துதலை நாடினான். தேவனுடைய நாமத்தின் மகிமைக்கென்று வேறுபிரிக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, கிறிஸ்துவுக்குள்ளே, விசுவாசிகள் யாவரும் ஒரே வீட்டாரும், ஒரே சரீரமாயும் அழைக்கப்பட்டடிருக்கின்றோம் என்பதை அறிந்திருக்கின்றீர்கள். அநித்தியமான இந்த வாழ்க்கையின் வழக்குகளை தீர்க்கும்படி யாரிடம் ஆலோசனைகளை நாடுகின்றீர்கள்? அவசிவாகிகள் உங்கள் ஆலோசகராக இருந்தால், அவர்களுடைய ஆலோசனை யாரிடம் இருந்து வருகின்றது? மாம்சத்திற்குரியதா? ஆவிக்குரியதா? நீங்கள் பயப்படும் நாளிலே யாரை நம்புவீர்கள்? தேவன், “எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார் எவர்களை அழைத்தாரோ அவர் களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார் எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார். இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர் அவரே எழுந்துமிருக்கிறவர் அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர் நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே”

**2 கொரிந்தியர் 6:15**

அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?

**ஜெபம்:** உம்முடைய பிள்ளையாக என்னை அழைத்த தேவனே, சகோத சிநேகம் என்னில் நிலைத்திருக்கவும், நான் நிதானமற்றுப் போகும் வேளையிலே பாவம் செய்யாதபடிக்கு என்னை கரம்பிடித்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பயப்படாதே! திகையாதே!

உங்கள் இருதயத்தின் நினைவுகளும், உங்கள் வாயின் வார்த்தைகளும் கர்த்தருக்கு ஏற்புடையதாயிருந்தால் யார் உங்களை எதிர்த்து நின்றாலும் ஏன் நொந்து கொள்கின்றீர்கள்? உங்கள் கிரியைகள் நீதிக்குரியவைகள் சக விசுவாசி தவறிவிட்டான் என்று நீங்கள் கருதி வாக்குவாதங்களையும், கலகங்களையும் ஏற்படுத்ததுகின்றவர்களாயிருந்தால், உங்கள்நீதியின் கிரியைகள் எங்கே? கர்த்தர் சமீபமாயிருக்கின்றார். கர்த்தர் சகலத்தையும் அறிந்திருக்கின்றார். கர்த்தர் விசாரிக்கின்றவராயிருக்கின்றார். கர்த்தர் ராஜரீகம் பண்ணுகின்றார். எனவே உங்கள் வாழ்க்கையிலே, உங்கள் சூழ நடக்கும் காரியங்களை குறித்து கலகமடையாதிருங்கள். நீங்கள் ஆவிக்குரியவர்கள் என்று கூறி, உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை, மாம்ச இச்சைகளால் உறுதிப்படுத்த முடியுமா? “நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள். அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.” கலத்தியார் 5ம் அதிகாரத்திலே தேவ ஊழிக்காரனாகிய பவுல் விசுவாசிகளுக்கு கூறியிருப்பதைக் காணலாம். சில சந்தர்ப்பங்களிலே, உங்களுக்குள்ளே, மாம்சம்ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் போர் செய்கின்றதை அனுபவித்திருப்பீர்கள். சுயம் என்னில் மகிமைப்படவேண்டுமோ அல்லது பிதாவாகிய தேவன் என்னில் மகிமைப்பட வேண்டுமோ? “மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும் கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.” “கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான் நீடியசாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான்.” “மாறுபாடுள்ளவன் சண்டையைக் கிளப்பிவிடுகிறான் கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்துவிடுகிறான்.” எனவே நீங்கள் பிதாவாகிய தேவனுடைய பிள்ளைகள் என்பதை அறிந்து, உங்கள் பரம தந்தையின் நாமம் உங்களில் மகிமைப்படும்படி நடந்து கொள்ளுங்கள். கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

**ஏசாயா 41:10**

**நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்;**

**ஜெபம்:** பரிசுத்த ஆவியை எனக்கு தந்த என் பிதவாகிய தேவனே, நான் உம்முடைய பிள்ளை என்று சொல்வதற்கு பாத்திரனாய் நடந்து கொள்ளும்படி என்னை உம்முடைய வழியிலே நடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.